**டிசம்பர் - 6**

**தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்.**

**- நீதி 25:28.**

தன்னோடு செய்கிற யுத்தமே மிகப்பெரிய யுத்தமாயிருக்கிறது. இதைக் குறிப்பிட, பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் (சொந்த) மனதையும் (சித்தத்தையும்) அடக்குகிறவன் உத்தமன். என்று சொல்லியிருக்கிற கர்த்தருடைய வார்த்ததையும் நம்மிடம் இருக்கின்றது. ஏனென்றால், அவன் அந்த அளவிற்கு தன்னடக்கத்தில் சரியான திசையில் உண்மையான குணத்தின் போராட்டத்தை கையாள அவன் கற்றுக் கொண்டிருக்கிறான். நம்மிலுள்ள பாவத்தோடும், சுயநலத்தோடும் போராடுவதிலும் நம்முடைய சொந்த கண்களிலுள்ள உத்திரத்தை எறிந்து போடுகிறதிலும், நம்முடைய இருதயத்திலும், மாம்சத்திலுமுள்ள கோபத்தையும், துர்க்குணத்தையும், பகையையும், சண்டையையும் அடக்குவதிலும், அதிகமான அனுபவத்ததைப் பெற்ற பிறகுதான் இந்தக் கடுமையான யுத்தத்தின் மூலமாயும் அனுபவத்தின் மூலமாயும், சகோதரருக்கு உதவி செய்யவும், நம்முடைய பிறருக்கு அவர்களுடைய கஷ்ட்டங்களில் உதவி செய்யவும், அவர்களை நெருங்கி நிற்கிறவைகளையும் பெலவீனங்களையும் வெல்ல அவர்களுக்கு உதவவும் ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம். **- Z 01, 295 (R 2877)**

ஆவி என்ற வார்த்தை குணத்தைக் குறிக்கிறது. தன் ஆவியை அடக்காத மனிதன் என்பது அவன் தன்னடக்கத்தில் குறைவுள்ளவனாயிருக்கிறான். என்பதைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட மனிதன், குணத்தின் படி சீரழிந்து போனவனாயிருக்கிறான். மதிலிடிந்த பாழான பட்டணத்தை உதாரணம் காட்டி சாலமோன் இதை விளக்குகிறார். அதன்படி நம்முடைய குணங்களில் நாம் ஒரு பட்டணத்துக்கு ஒப்பாக இருக்கிறோம். நம்முடைய பல்வேறு நல்ல குணங்கள் வீடுகளுக்கும், நம்முடைய நல்ல எண்ணங்கள் பட்டணத்தைப் பாதுகாக்கிற யுத்த வீரர்களுக்கும், தன்னடக்கம் பட்டணத்தின் மதிலுக்கும் ஒத்திருக்கின்றன. வெளிப்புறத்தில் பாவம், வஞ்சகம், சுயநலம், உலகத்தனம் ஆகிய இவைகள் தங்களுடைய தளகர்த்தனான சாத்தானுக்கடியில் யுத்த வீரர்களைப்போலவும், மாம்சமும், உலகமும் அவனுக்குக் கீழ் வேலை செய்கிற உத்தியோகஸ்தர் போலவும் இருக்கின்றன. இவைகள் முக்கியமாக நம்முடைய தன்னடக்கத்ததைத் தீவிரமாகத் தாக்கும். அதை உடைத்துக் கொண்டு அவைகள் நம்மிடமுள்ள எல்லா நல்ல எண்ணத்தையும் தன்மையையும் பாழாக்கும். நம்முடைய முக்கியமான கவலைத் தன்னடக்கத்தின் சுவரில் உடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதாகும். இவ்விதமாகச் செய்து கொண்டிருப்போமானால், நம்முடைய அடையாளமான பட்டணத்தை அழிவிலிருந்து பத்திரப்படுத்தி நம்முடைய தற்காப்பளிக்கும் போராட்டத்தில் ஜெயங்கொண்டவர்களாக நிரூபிக்கப்படுவோம். **- P 34, 174. 175.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 116.11, நீதி 14.29, 16.32, 19.2, 21.5, 23.2, 25.8, 29.20, பிர 5.2, 7.9, லூக் 14.26.27, ரோம 8.12.13, 13.14, 14.1-15.5, 1கொரி 6.12, 8.13, 9.12, 15.18, 19.23, 25.27, கொலோ 3.5, தீத் 2.12, 1பேது 1.6.**

**கோபுர வாசிப்பு : Z 15, 87 (R 5652)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் தன்னடக்கத்தைக் கையாண்டேனா? அல்லது அதில் தோல்வியடைந்தேனா? ஏன்? எவ்வாறு? பலன்கள் எவை?**